05.11.2025

O.S.No. 205/2024

PW1– சுப்பிரமணியன்– த/பெ. ஆறுமுகம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.11.2025

குறுக்கு விசாரணை : (1ம் பிரதிவாதி தரப்பில்)

1. என் தாத்தா பெயர் சுப்பையா மூப்பனார் என்றால் சரிதான். மேற்படி சுப்பையா மூப்பனாருக்கு ஆறுமுகம், ராமசாமி என்ற இரண்டு மகன்கள் உண்டு என்றால் சரிதான். இதுதவிர பிரமுஅம்மாள், ஆறுமுகத்தம்மாள், லட்சுமியம்மாள் ஆகியோர் பெண்மக்கள் என்றால் சரிதான். சுப்பையா மூப்பனாரின் வாரிசுசான்று, இறப்புசான்று என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். சுப்பையா மூப்பனாரின் உடன்பிறந்த சகோதரி லட்சுமியம்மமாள் என்றால் எனக்கு தெரியாது.

2. சுப்பையா மூப்பனாருக்கு பூர்வீகம் முதலியார்பட்டி கிடையாது என்றால் எனக்கு தெரியாது. சுப்பையா மூப்பனார் எந்த ஆண்டு முதலியார்பட்டி வந்தார் என எனக்கு தெரியாது. தபசில் சொத்து சுப்பையா மூப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் என்வசம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பதிவு ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. எனது சொத்துசம்பந்தப்பட்ட மூலஆவணங்களை வழக்கறிஞரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

3. சுப்பையா மூப்பனார் சொத்துக்களை பொறுத்து பிரிவினை நடைபெற்றதா என்றால் எனக்கு தெரியாது. சுப்பையா மூப்பனாருக்கு

பாத்தியப்பட்ட சொத்துக்கள் எவ்வாறு ஆறுமுகத்திற்கு வந்தது குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். ஆறுமுகம் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா என்றால் சரிதான். மேற்படி பட்டா சம்பந்தமாக விசாரணை நடைபெற்றதா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. ஆறுமுகத்திற்கு சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்பதை காட்ட பதிவு ஆவணம் உண்டா என்றால் கிடையாது. இசக்கியம்மாள் வீட்டு மேலச்சுவர் அவரது சொந்தச்சுவர் என்றால் சரிதான். இசக்கியம்மாள் வீட்டுச்சுவரை வெள்ளையடித்து பராமரித்துவருகிறார் என்றால் சரிதான், ஆனால் எங்கள் முடுக்கை பயன்படுத்திவருகிறார்கள். எனக்கு விவரம் தெரிந்து இந்நாள்வரை மேற்படி முடுக்கை நடந்து பயன்படுத்திவருகிறார்கள். சுமார் 30 ஆண்டுகளாக நடந்து புழங்கி பயன்படுத்திவருகிறார்கள். எனது தந்தையோ, தாத்தாவோ மேற்படி இசக்கியம்மாளை முடுக்கு பயன்படுத்துவதை எந்த தடையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. இசக்கியம்மாள் வீட்டின் மேலச்சுவரில் மேற்குபார்த்து வாசல் உள்ளது என்றால் சரிதான். அந்த வாசல் வழியாக தான் முடுக்கிற்கு சென்றுவருகிறார்கள் என்றால் இன்றிலிருந்து சுமார் 10 வருடங்களுக்கு முன்பு வாசல் அமைத்தார்கள். வாசல்அமைத்ததை நானோ, எனது தந்தையோ, எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் நாங்கள் வெளியூரில் இருந்தோம், அதனால் தெரிவிக்கவில்லை. வாசல் அமைத்து ஒரு ஆண்டுகழித்துதான் தெரியவந்தது என்றால் சரிதான். அதற்குபிறகும் நாங்கள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான்.

6. இசக்கியம்மாளுக்கு மேலச்சுவரை பராமரிக்க இந்த முடுக்கை தவிர வேறு பாதை கிடையாது என்றால் சரிதான். தாவா முடுக்கை பயன்படுத்தி இசக்கியம்மாள் அவரது வீட்டு மேலச்சுவரை பராமரிப்பதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் கிடையாது என்றால் சரியல்ல. இசக்கியம்மாளுக்கும், எனக்கும் நடைபாதை சம்பந்தமாக உரிமைப்பிரச்சனை உண்டா என்றால் 2020ம் ஆண்டு பிரச்சனை ஏற்பட்டது. மேற்படி முடுக்கில் நாங்கள் படிக்கட்டு முயற்சி செய்தபோதுதான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

7. முடுக்கிற்கு வடபக்கமும், தென்பக்கமும் கதவு கிடையாது என்றால் சரிதான். மேற்படி முடுக்கு வடக்கே உள்ள தெருவையும், தெற்கே உள்ள தெருவையும் இணைக்கும் விதமாக உள்ளது என்றால் சரிதான். வீடுகட்டும்போது தான் எனது மேல்வீட்டுக்காரருக்கும், எனக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

8. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டபிறகு பெறப்பட்ட அனுமதி என்றால் சரிதான். அதில் வரிசை எண்ணோ, உத்தரவு எண்ணோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை, கையெழுத்துக்குபின் தேதி மட்டும் போடப்பட்டுள்ளது. முடுக்கில் படிக்கட்டு கட்டப்படுவதாக வரைபடத்தில் காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

9. என் தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நத்தம் நிலவரித்திட்ட

பட்டாவின் அடிப்படையில்என் பெயருக்கு ஏற்பாடு ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தந்தைக்கு பிராதில் உள்ள அளவுகளின்படி சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்பதை காட்ட எந்த பதிவு ஆவணம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. என் தந்தை உயிருடன் தான் உள்ளார். அவரை விசாரித்தால் சொத்துவரலாறு தெரியும் என்றால் சரிதான். எனது தந்தையை விசாரித்தால் சுப்பையா மூப்பனாருக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது, அவரது பூர்வீகம் தெரியவரும் என்றால் சரிதான். எனது தந்தையை எனதுதரப்பில் விசாரிக்கலாம் என்றால் சரிதான்.

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.